பக்கங்கள் 20+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | கார்த்திகை 18 புதன்கிழமை 04.11.2024 | அதிர்வு 125

## ஜனாதிபதி அநுரவுடன் தமிழரசு இன்று சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் இன்று மாலை சந்திப்பு நடைபெறுகின்றது.

02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்

## காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி வேண்டும் என்று சபையில் தமிழரசின் எம்.பி. சாணக்கியன் வலியுறுத்து

"பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதியின் அக்கிராசன உரை மீது நாடாளுமன்றத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"நாட்டில் சமத்துவம் என்பது மிகவும் முக்கியமானது. அதனை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனாலும், ஜனாதிபதி அண்மையில் ஆற்றிய அக்கிராசன உரையில் தமிழ் மக்களுக்கு மட்டும் உரித்தான சில பிரச்சினைகள் பற்றி பேசியிருக்கவில்லை.

வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பிரதான கட்சி என்ற அங்கீகாரம் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு மீண்டும் கிடைத்துள்ள நிலையில், இந்த விடயங்களை நான் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

02

## யாழ். குருநகர் கடற்பரப்பில் 183 கிலோ கஞ்சாவுடன் டிங்கி படகு ஒன்று மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், குருநகர் கடற்பரப்பில் 183 கிலோ கிராம் கேரளக் கஞ்சாவுடன் டிங்கி படகு ஒன்று மீட்கப்பட்டது.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் இந்த மீட்பு நடவடிக்கை இன்று அதிகாலை 3.30 மணியளவில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. ஆனாலும், 92 பொட்டலங்கள் அடங்கிய கஞ்சா இவ்வாறு மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட படகு மற்றும் கஞ்சா பொட்டலங்கள் என்பன யாழ்ப்பாணம்

02

## ரி.ஐ.டியால் கைது செய்யப்பட்ட யாழ். இளைஞருக்குப் பிணை

### பயணத் தடை விதிப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் – இணுவிலைச் சேர்ந்த இளைஞரைப் பிணையில் செல்ல யாழ். நீதிவான் நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

மாவீரர் நாள் புகைப் படங்களையும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் புகைப்படங்களையும் தனது

02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# தமிழரசுக் கொழும்புக் கிளை புனரமைப்புச் செய்யப்பட்டது

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளை நேற்று புனரமைக் கப்பட்டுள்ளது.

இதன்போது கொழும்புக் கிளை யின் முன்னாள் செயலாளர் சி.இரத் தினவடிவேல் தலைவராகவும், செல்வி. மலர்விழி சிங்காரநாதன் செயலாள ராகவும், முத்துக்குமாரசாமி பொரு ளாளராகவும் தெரிவு செய்யப்பட்ட னர்.

அத்துடன் ஐவர் மத்திய செயற்குழு உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப் பட்டனர்.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் எம்.பி., முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரும் பங்குபற்றினர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 183 கிலோ...

பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டன.

இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலி சார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### ரி.ஐ.டியால்...

முகநூலில் பகிர்ந்த குற்றச்சாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இணுவிலைச் சேர்ந்த இளைஞரைப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைது செய்திருந்தனர்.

மேற்படி இளைஞரை யாழ்ப்பாணத் தில் உள்ள பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் அலுவலகத்தில் சுமார் 72 மணித்தியால விசாரணைகளின் பின்னர், ஞாயிற்றுக்கிழமை மன்றில் முற்படுத்திய நிலையில் இன்று புதன் கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந் தது.

இந்நிலையில், குறித்த வழக்கு இன்று மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, அந்த இளை ஞரை 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் செல்ல அனு மதித்த மன்று, பயணத் தடையும் விதித் துள்ளது.

### அரசியல் கைதிகளை...

அந்தவகையில் பல அரசியல் கைதி கள் இன்னும் விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். ஓர் அரசியல் நோக்கத்துக்காக ஆயுதம் ஏந்திப் போராடி ய இந்தத் தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் பயங்கரவாதத் தடுப் புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவர்கள் மீது தற்போது பல்வேறு வழங்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பில் அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டும்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கு வதாகக் கூறி ஆட்சிக்கு வந்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசும் தற்போது அந்தச் சட்டத்தை கையில் எடுத்துள்ளது.

இந்தநிலையில், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடு தலை செய்ய அரசு கவனம் எடுக்க வேண்டும்.

அதேபோல் காணாமல் ஆக்கப்பட் டோருக்கு நீதி கிடைக்க வேண்டும். இந்த விடயத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப் படுவது மட்டுமின்றி, உண்மை கண்ட றியப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

காணி சம்பந்தமான பிரச்சினைகள் தமிழ் மக்களுக்கு அதிகம் இருக்கின்றன. இந்த விடயத்தில் சமத்துவம் என்ற அடிப் படையில் சிங்கள மக்களுக்கு இல்லாத பிரச்சினைகள் தமிழ் மக்களுக்கு இருக்கின் றன.

மேய்ச்சல் தரையுடன் தொடர்புடைய மகாவலி அதிகார சபையுடைய பிரச்சினை வடக்கு, கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்க ளிலும் உள்ளன. இந்தப் பிரச்சினை தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை நாங்கள் அறிய வேண்டும்.

அதேபோல் தொல்பொருள் திணைக் களத்தால் இந்த நாட்டில் சிங்கள மக்க ளுக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் இல்லை. ஆனால், தமிழ் மக்கள் தொடர்ச்சி யாகத் தொல்பொருள் திணைக்களச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கல்முனை வடக்கு பிர தேச செயலகம் தொடர்பான பிரச்சினை யில் அரசு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இது நிர்வாக ரீதியான ஒரு பிரச்சினை. இது தமிழ் மக்களுக்கு எதிரா கப் பயன்படுத்தப்பட்ட ஒரு பிரச்சினை.

இந்நிலையில், அரசு இதற்கொரு தீர்வை வழங்க வேண்டும். ஏனெனில் ஆளும் கட்சிக்கும் தமிழ் மக்களின் வாக்குகள் கிடைத்துள்ளன. ஆகை யினால், அரசு தமது நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும்.

மேலும், வடக்கு, கிழக்கில் உள்ள இரா ணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும். வடக்கில் உள்ள முக்கிய வீதிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்போது நீக் கப்பட்டுள்ளன. அதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

ஆனாலும், இந்த விடயத்தில் இன் னும் மேலதிக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். பாடசாலைகள், ஆலயங்கள் மற்றும் பொது மக்களின் காணிகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட் டுள்ளன.

அதனை அகற்ற அரசு முன்மாதிரி யான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்." – என்றார்.

### ஜனாதிபதி அநுரவுடன்...

ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் இந்தச் சந்திப்பில் தமிழரசுக் கட்சியின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும் பங் கேற்றுள்ளனர்.

'இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனாதி பதி அநுரகுமார திஸாநாயக்கவை இந்த வாரம் சந்தித்துக் கலந்துரையாடு வதற்கு வாய்ப்பளிக்கப்படும். இதன்போது மாகாண சபை முறைமை தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடி அரசின் நிலைப்பாட்டை அறிந்து கொள்ளலாம்.' – என்று சபை முதல்வரும் அமைச்சரு மான பிமல் ரத்நாயக்க, இலங்கைத் தமி ழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியனிடம் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது.

# பலாலி ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் வழிபாடு

## ஆளுநரும், கட்டளைத் தளபதியும் பங்கேற்பு









பலாலியில் மக்கள் வழிபாட்டுக்கு அண்மையில் அனுமதிக்கப்பட்ட ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் இன்று புதன்கிழமை நடைபெற்ற வழிபாடுகளில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனும், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்கவும் பங்கேற்றனர்.

இதன்போது ஆலய நிர்வாகத்தினராலும், ஆலயக் குருக்களாலும் வடக்கு மாகாண ஆளுநர் மற்றும் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலக மேலதிக மாவட்ட செயலர் க.சிறிமோகனன், கிராம அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க இன்றுடன் இலங்கை இராணுவத் தொண்டர் படையின் தளபதியாக பதவி உயர்வு பெற்றுச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.



# விடைபெறும் யாழ். கட்டளைத் தளபதி வடக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனை யாழ்ப்பாணம் மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க சம்பிரதாயபூர்வமாக நேற்று செவ்வாய்க்கிழமை ஆளுநர் செயலகத்தில் சந்தித்தார்.

மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க இடமாற்றமாகி இன்று புதன்கிழமை புறப்படும் நிலையில் மரியாதை நிமித்தமாக இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.



# இணக்கமான இறுதித் தீர்வு வரும் வரையில் ‘13’ ஐ முழு அளவில் நடைமுறைப்படுத்துக!

## நியாயத்தை விவரிக்கின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

ஜே.வி.பி. மற்றும் தேசிய மக்கள் சக்தியினர் மாகாணசபை தொடர்பாக அண்மையில் வெளிப்படுத்திவரும் கருத்துகளுக்கு பதிலளிக்கும் வகையில் ஊடக அறிக்கையொன்றினை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் பேச்சாளருமான சுரேஷ் க. பிரேமச்சந்திரன் இன்று வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையின் முழு விவரம் வருமாறு:

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் பொழுது மாகாணசபை முறைமைகள் பாதுகாக்கப்படும் என்றும் அதற்கான தேர்தல் விரைவாக நடத்தப்படும் என்றும் அதிலுள்ள அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதியினாலும் அவருடன் இருக்கக்கூடிய ஏனைய கட்சி உறுப்பினர்களாலும் பிரசாரம் செய்யப்பட்டது. வேறுபல உறுதிமொழிகள் கொடுக்கப்பட்டிருந்தாலும் மேற்கண்ட உறுதிமொழியானது முக்கியத்துவமானதும் முதன்மையானதுமாகும்.

புதிதாக வந்திருக்கக்கூடிய அநுர அரசாங்கமானது இனவாதம், மதவாதம் போன்றவற்றிற்கு இந்த நாட்டில் இடமில்லை என்று கூறுகின்றது. வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அவர்களுக்குக் கிடைத்த நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்டு தமிழ் மக்கள் மத்தியில் இனவாதம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்ற சாரப்படவும் பேசுகின்றனர்.

அநுர அரசாங்கமும் ஜே.வி.பியும் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து ஆட்சிப்பீடமேறிய அனைத்து அரசாங்கங்களும் பல்வேறுபட்ட வழிமுறைகளில் தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கி வந்தனர். இதன்காரணமாக அன்றிலிருந்து இன்றுவரை மாறிமாறி வந்த அரசாங்கங்களின் தமிழர் விரோத கொள்கைகளிலிருந்து தமிழ் மக்கள் தம்மை தற்காத்துக்கொள்ள இவற்றிற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய நிலையும் போராட வேண்டிய நிலையும் ஏற்பட்டது. தம்மைத் தற்காத்துக்கொள்ள அவர்கள் எடுக்கும் முயற்சிகள் இனவாதம் ஆகாது. மாறாக தமிழ் மக்களது மொழியை, கல்வியை, கலாசாரத்தை, மத நம்பிக்கைகளை அழிக்க வேண்டுமென்றும் சிங்கள குடியேற்றங்களினூடாக அவர்களின் இருப்பை இல்லாமல் செய்ய வேண்டுமென்றும் நடைபெற்ற அனைத்துமே சிங்கள மேலாதிக்க இனவாதத் தன்மை கொண்டவை. இவை அகற்றப்படவேண்டும் என்பதில் எமக்கும் மாற்றுக்கருத்தில்லை.

கடந்த ஏழு வருடங்களாக மாகாணசபைத் தேர்தல்கள் நடைபெறவில்லை. இதன் காரணமாக மாகாணசபைக்கு உரித்தான அனைத்து அதிகாரங்களும் 



கொழும்பிலிருக்கின்ற அரசாங்கத்தாலேயே கையாளப்படுகின்றன. இப்பொழுது வந்திருக்கின்ற அரசாங்கமும் கூட மாகாணசபை தேர்தல்களை விரைந்து நடாத்துவதற்கான எவ்வித ஆயத்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமல் 2025ஆம் வருட இறுதியிலோ அல்லது அதற்குப் பின்னராகவோ மாகாணசபைத் தேர்தல்களை நடத்தலாம் என்று கூறுகிறது.

மறுபுறத்தில் புதிய அரசியல் சாசனத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அகற்றுவோம், இது தேவையற்ற ஒரு விடயம் என்ற முடிவை ஜனதா விமுக்தி பெரமுன கட்சியின் செயலாளர் ரில்வின் டி சில்வா உறுதிபடக் கூறுகின்றார். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை முன்மொழிய மறுக்கும் பிரதமரோ, ஜனாதிபதியோ அல்லது தேசிய மக்கள் சக்தியோ பதின்மூன்றாவதை இல்லாமல் செய்வோம் என்பதை தெளிவுபடக் கூறுகிறார்கள். இந்த நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற இன, மத பேதங்கள் இல்லை என்றும் நாங்கள் எல்லோரும் இலங்கையர்கள் என்றும் கூறுவதனூடாக தேசிய இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை என்றும் கூற முற்படுகின்றார்கள்.

ஒரு விடயத்தை நாம் தெளிவுபடக் கூறவேண்டும். தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதன் ஒரு பகுதியாகவே இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் இலங்கை அரசாங்கம் சார்பில் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் இலங்கை தமிழ் மக்களின் சார்பாகவும் இந்தியா சார்பாகவும் அன்றைய இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் கையெழுத்திட்டனர்.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக பதின்மூன்றாவது திருத்தச் சட்டமும் கொண்டுவரப்பட்டது. ஆனாலும் கூட அப்பொழுதைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன எல்லா மாகாணங்களுக்குமான ஓர் அதிகாரப் பரவலாக்கமாக இதனை மாற்றினார். ஆனால் இந்த பதின்மூன்றாவது திருத்தம் போதாது என்பதை பின்னர் வந்த சகல ஜனாதிபதிகளும் ஏற்றுக்கொண்டார்கள்.

ஜனாதிபதி பிரேமதாஸ அவர்கள் மங்களமுனசிங்க தலைமையில் நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை உருவாக்கி ஒரு புதிய தீர்வுத்திட்டம் தொடர்பான அறிக்கை ஒன்றைக் கோரியிருந்தார். அவருக்குப் பின்னர் வந்த சந்திரிகா குமாரதுங்க பண்டாரநாயக்க அவர்கள் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற மேம்பட்ட தீர்வுத்திட்டம் ஒன்றை உருவாக்கி அதனைப் நாடாளுமன்றம் வரை கொண்டுசென்றார். பின்னர் வந்த மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் திஸ்ஸவிதாரண கமிஷன் என்ற ஒரு சர்வகட்சி குழுவை உருவாக்கி அவர்களும் ஒரு தீர்வுத்திட்ட அறிக்கையைக் கையளித்திருந்தார்கள். இறுதியாக நல்லாட்சி ஒன்றை உருவாக்குவதாகக் கூறிய மைத்திரிபால சிறிசேனாவின் ஆட்சியில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை உள்ளடக்கியதாகக் கூறப்படும் ஒரு புதிய அரசியல் சாசன முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. அதில் இப்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் முக்கிய பங்குதாரராக இருந்தார். இவ்வளவும் ஏன் நடைபெற்றது என்றால் பதின்மூன்றாவது திருத்தத்தைவிட மேம்பட்ட அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கு வழங்கப்படவேண்டும் என்ற அடிப்படையிலேயே இக்குழுக்களும் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்றன.

ஆனால், இன்று வந்திருக்கக்கூடிய இடதுசாரி மார்க்சிய லெனினிய அரசானது இவற்றை நிகாரிக்கின்ற ஒரு போக்கைக் கொண்டிருப்பதையே காணக்கூடியதாக உள்ளது. இங்கு நாம் இன்னுமோர் விடயத்தை தெளிவுபடக் கூறிக்கொள்கிறோம். இலங்கை சுதந்திரம் அடைந்த காலகட்டங்களில் வடக்கு-கிழக்கு மக்களுக்கு சுயாட்சி வழங்கப்பட வேண்டும் என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனது மகாநாட்டில் தீர்மானத்தை நிறைவேற்றியது. ஆனால் பின்னர் அதனை முழுமையாகக் கைவிட்டது.

அதேபோல் லங்கா சமசமாசக் கட்சியின் தலைவராக இருந்த கொல்வின் ஆர் டி சில்வா அவர்கள் சிங்களம் மாத்திரம் என்று ஒரு சட்டம் வந்தபொழுது ‘இரண்டு மொழி ஒரு நாடு ஒரு மொழி என்றால் இரண்டு நாடு’, எனவே இலங்கை ஒரு நாடாக இருக்க வேண்டுமாக இருந்தால் சிங்களம் – தமிழ் இரண்டிற்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்தில் குரல் கொடுத்தார். ஆனால் 1972இல் புதிய அரசியல் சாசனத்தின் பிதாமகனாக அவர் கடமையாற்றியபொழுது தமிழ் மக்களின் பாதுகாப்பிற்காக பிரித்தானியரால் உருவாக்கப்பட்ட டொனாமூர் அரசியல் யாப்பில் இடம்பெற்றிருந்த 29ஆவது சரத்தும் இவரால் இல்லாமல் ஆக்கப்பட்டது.

இறுதியாக தமிழ் மக்களுக்கு பிரிந்து போவதுடன் கூடிய சுயநிர்ணய உரிமை இருக்கிறது என்று கூறிய நவசமமாசக்

தொடர்ச்சி ▼

# இணக்கமான....

தொடர்ச்சி▲

கட்சியின் தலைவரான வாசுதேவ நாணயக்கார அவர்களும் தமிழ் மக்களுக்கு எவ்வித அதிகாரங்களும் தேவையில்லை என்ற ஒரு நிலைப்பாட்டையே எடுத்திருந்தார். ஆகவே இடதுசாரிகள் என்பவர்கள் எவ்வாறு தம்மை இனவாதிகளாக மாற்றிக்கொண்டார்கள் என்பது வரலாற்றில் மிகத் தெளிவான விடயமாக இருக்கின்றது.

ஜே.வி.பி. அல்லது ஜனதா விமுக்தி பெரமுன என்று சொல்லக்கூடிய இடதுசாரி கட்சியானது அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எதிரான இந்தியாவிற்கு எதிரான கொள்கைகளையே தன்வசம் கொண்டிருந்தது. அதனையே பிரசாரப்படுத்தியும் வந்தது. 1971ஆம் ஆண்டின் கிளர்ச்சியின் போதும் சரி 1987, 88 கிளர்ச்சிகளின் போதும்சரி அவர்கள் தமிழர் தரப்பிலிருந்து யாரையும் உள்வாங்கிக்கொள்ளவில்லை. தமிழர்களை எதிரிகளாகவே பார்த்தார்கள். இந்தியாவையும் கூட ஒரு விஸ்தரிப்பு வாதம் கொண்ட ஒரு நாடாகவே காட்டினார்கள். இந்தியாவிலிருந்து பொருள்கள் இறக்குமதி செய்வதைக்கூட எதிர்த்தார்கள்.

ஆகவே இடதுசாரிகள் என்று சொல்வதன் காரணமாக மாத்திரம் இவர்கள் சமத்துவத்தையும் நீதியையும் தமிழர்களுக்கு அளித்துவிடுவார்கள் என்பது அர்த்தமற்ற ஒரு பொய்ப்பிரசாரமாகும். தேசிய மக்கள் சக்தியானது தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று நம்பக்கூடிய தமிழ் புத்திஜீவிகள், கல்வியாளர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் இந்த வரலாற்றை நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினராகிய நாம் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை ஒன்று இருக்கின்றதென்பதை ஏற்றுக்கொண்டு அதற்கான தீர்வை முன்வைக்க வேண்டும் என்பது எமது முதலாவது கோரிக்கையாகும்.

அந்தத் தீர்வு எட்டப்படும்வரையில் மாகாணசபைகளுக்கு உரித்தான பதின்மூன்றாவது திருத்தம் என்பது முழுமையாக அமுல்படுத்தப்படுவதுடன் மாகாணசபைத் தேர்தல்களும் மிக விரைவாக நடத்தப்பட்டு மக்களால் தெரிந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளிடம் மாகாணசபை நிர்வாகங்கள் ஒப்படைக்கப்பட வேண்டும். பதின்மூன்றாவது திருத்தம் ஒன்று மட்டுமே தமிழ் மக்கள் கைவசம் இருக்கக்கூடிய ஒரேயொரு பாதுகாப்பு அரணாக தற்பொழுது இருக்கின்றது.

டொனாமூர் அரசியல் யாப்பிலிருந்த 29ஆவது சரத்தை அழித்தொழித்தது போல மாகாணசபை முறைமையையோ அல்லது அதற்கான அதிகாரங்களை வழங்குகின்ற பதின்மூன்றாவது திருத்தத்தையோ இல்லாதொழிக்க நாங்கள் அனுமதிக்கக்கூடாது.

முப்பத்தேழு வருடங்களாக இந்த மாகாணசபையால் எந்தப் பிரயோசனமும் இல்லை என்றும் சிலர் கூறுகின்றார்கள். ஆனால் 1988ஆம் ஆண்டு மாகாணசபைகள் உருவாக்கப்பட்ட போதும் கூட 2009ஆம் ஆண்டுவரை இந்த நாட்டில் ஒரு யுத்தம் நடைபெற்றது. ஆனால் 2009ஆம் ஆண்டிற்குப் பின் ஆட்சிபீடம் ஏறிய அரசாங்கங்களும் மாகாணசபைத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தாமலும் அதனை ஒத்தி வைப்பதுடன் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தாமலும் காலத்தை ஓட்டினார்களே தவிர, மாகாணசபை முறைமையை உயிர்த்துடிப்புடன் செயற்படுத்துவதற்கான எந்த அக்கறையையும் அவர்கள் வெளிப்படுத்தவில்லை.

பதின்மூன்றாவது திருத்தத்தைப் பற்றிப் பேசினால் புனிதம் கெட்டுவிடும், தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்ற கற்பனாவாத கதைகளைக் கைவிட்டு தமிழ் மக்கள் விரும்புகின்ற ஓர் அரசியல் சாசனம் வரும்வரையில் பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்படவேண்டும் என்பதை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடாளுமன்றத்திற்கு உள்ளும் வெளியிலும் அதற்காகக் குரல்கொடுக்க முன்வரவேண்டும். – என்று உள்ளது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## உள்ளூராட்சித் தேர்தல் இழுபறி

ஜனாதிபதித் தேர்தலில் வென்றதும் விழுந்தடித்து பொதுத் தேர்தலை நடத்தி, ஜனாதிபதித் தேர்தல் வெற்றியை கனகச்சிதமாகத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டது ஜே.வி.பியையும் உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தி. அதன் மூலம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையையும் தாண்டிய வெற்றி என்ற வரலாற்றுச் சாதனையையும் அது ஈட்டிக் கொண்டது.

அந்த இரு வெற்றிகளும் தேசிய மக்கள் சக்தியின் கொள்கை நிலைப்பாட்டுக்கு, நடைமுறையாக்கத்துக்கு, மக்கள் அதன் மீது வைத்திருக்கும் அபார நம்பிக்கைக்கு உரியன என்று அந்த அரசியல் தலைமை நம்புமானால், அந்த வேகத்திலேயே – வந்த வேகத்திலேயே – நிலுவையாக இருக்கும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களையும் அக்கட்சி நடத்தி முடிக்க முயற்சி எடுத்திருக்கலாமே? முன்னைய தேர்தல் வெற்றி அலையோடு சேர்த்து உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகங்களையும் மக்கள் பிரதிநிதிகள் மூலம் கையாளும் வெற்றியை தனதாக்கி இருக்கலாமே? அதில் பின்னடிப்பு ஏன்?

சுமார் இரண்டு ஆண்டுகளுக்கு முந்தைய வேட்புமனுக்களின் அடிப்படையில் இப்போது அந்தத் தேர்தலை நடத்துவது பொருத்தமற்றது என்ற ஏனைய கட்சிகளின் நிலைப்பாட்டை ஆளும் தரப்பும் ஏற்றுக் கொண்டால் கூட, ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்ட வேட்புமனுக்களை ரத்துச் செய்து, புதிய வேட்புமனுக்களை ஏற்று, அந்தத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை விரைந்து செய்வதுதானே?

இவ்விடயத்தில் புதிய அரசின் நடவடிக்கைகள் உறுதியானவையாகவும், தெளிவானவையாகவும், திட்டமிடப்பட்டவையாகவும் இருப்பன போன்ற கருத்தைத் தரவில்லை. மெத்தனமான போக்கே வெளிப்படுகின்றது.

முதலில் புத்தாண்டு பிறந்ததும் அத்தேர்தல் என்றார்கள். பின்னர் ஏப்ரலில் அந்தத் தேர்தல் நடக்கும் என்றார்கள். தமிழ் – சிங்களப் புத்தாண்டுடன் அது நடக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இப்போது, அந்தத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்று, இந்தத் தேர்தலை இரண்டு வருடங்களாகத் தள்ளிப்போட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கையாண்ட அதே தந்திரப் பாணியைத் தாங்களும் கையில் எடுக்கின்றார்கள். இனி, புதிய வரவு – செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்து, அதன் பின்னர்தான் வேட்புமனுக்கள் புதிதாக, ஏற்று இந்தத் தேர்தல் என்கின்றார்கள் இப்போது. அப்படியாயின் ஏப்ரலில் வரவு – செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, அதன் மூலம் இத்தேர்தலுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட பின்னர்தான் இத்தேர்தல் இனி ஆரம்பத்திலிருந்து தொடங்கும். அப்படிப் பார்த்தால் ஜுலைக்குப் பின்னர்தான் உள்ளூராட்சித் தேர்தல் இனிமேல் நடக்கும். அத்தேர்தலுக்கு இன்னும் எட்டு, ஒன்பது மாதங்கள் காத்திருக்க வேண்டி நேரும்.

நிலுவையிலிருக்கும் உள்ளூராட்சித் தேர்தலை இனிமேலும் காலதாமதம் செய்யாமல் நடத்தி முடிக்கும்படியான உயர் நீதிமன்றத்தின் உத்தரவு – தீர்ப்பு – நிலுவையில் இருகத்தக்கதாகவே இந்த இழுபறி நிலைமை நீடிக்கின்றது என்பது கவனிக்கப்பட வேண்டிய விவகாரம்.

எது, எப்படியாயினும் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள்தாம் கடந்த ஆட்சியாளர்களின் வீழ்ச்சிப்படியின் ஆரம்பமாக அமைந்தன என்ற படிப்பினையை இதுவரை காலமும் நாடாளுமன்றத்தில் இருந்த புதிய ஆட்சித் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கா மறந்து விடக் கூடாது.

2015 இல் அதிகாரத்துக்கு வந்த நல்லாட்சி அரசின் வீழ்ச்சிக் காலம், 2018 இல் பொதுஜன பெரமுனவின் எழுச்சி உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளோடு வெளிப்பட்ட போதுதான் தீர்மானகரமானதாக ஆரம்பித்தது.

கடந்த ரணில் அரசு கூட உள்ளூராட்சித் தேர்தலை முறையற்ற விதத்தில் தள்ளிப்போட்டதன் மூலமே தனது வீழ்ச்சியை உறுதிப்படுத்தியது.

இந்தப் பட்டறிவிலிருந்து பாடம் படிக்க புதிய ஆட்சியாளர்களும் தவறுவார்களேயானால் அதே நிலைமையே அவர்களுக்கும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# தமிழருக்கு எதிரான அரசியல் போரை ஜே.வி.பி. இனிமேல் தீவிரப்படுத்தும்!

## எதிர்வு கூறுகின்றார் அருட்தந்தை மா.சத்திவேல்

(கனகராசா சரவணன்)

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக் காலம் என்பது வடக்குக் கிழக்கு தமிழர்களின் அரசியலுக்கு எதிரான உக்கிரமான அரசியல் போர்க்காலமாக இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்பட தொடங்கியுள்ளன என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான அருட்தந்தை மா.சக்திவேல் இன்று புதன்கிழமை ஊடக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக் காலம் என்பது வடக்குக் கிழக்கு தமிழர்களின் அரசியலுக்கு எதிரான உக்கிரமான அரசியல் போர்க்காலமாக இருக்கும் என்பதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன.

அரசியல் களச் சூழ்நிலை அறிந்து எமக்கிடையிலான பலமான அரசியல் கூட்டுக் கட்டமைப்பு உருவாக்கினால் மட்டுமே நாம் எதிர்நோக்கும் அரசியல் போரை எதிர்கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்ட அரசியல் பிரேரணைகளை மையப்படுத்தி பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான ஆயத்த பேச்சுவார்த்தையினை தமிழ் தேசிய முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கும் தமிழரசு கட்சி தலைவர் சிறீதரனுக்கும் இடையில் ஆரம்பித்திருப்பதை வரவேற்பதோடு இக்கூட்டு செயற்பாடு நாடாளுமன்றத்திற்குள்ளும் அதற்கு வெளியிலும் கொள்கை ரீதியில் பலமடைய வேண்டும். விரிவடைய வேண்டும் என வேண்டுகிறோம்.

புலம்பெயர்ந்தோர் அமைப்புக்களும் தடம் மாறாது களத்திலும் புலத்திலும் அரசியல் கடப்பாட்டினை நிறைவேற்றத் துணை நிற்க வேண்டும். அன்று பொங்கு தமிழாக, அதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் பேரவையாக திரண்டமை போன்று மீண்டும் மக்கள் அரசியலும் அதற்கான கூட்டு செயல்பாடும் கொள்கை ரீதியில் விட்டுக் கொடுப்புக்கள் இன்றி பலமடைய அனைவரும் அரசியல் முதிர்ச்சியோடுதம்பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டும் எனவும் கேட்கின்றோம்.

தமிழர் தாயக விடுதலை போராட்டத்தை தமிழ் மக்கள் பேரவையின் அரசியல் பயணத்தை சிதைத்த சக்திகளுக்கு மத்தியில் நேற்று முளைத்த



சில அரசியல் காளான்களுக்கும் எம் தாயக அரசிற்கான கூட்டு தடையாக இருக்கலாம். அது எல்லாவற்றையும் பாடமாக கொண்டு அரசியல் பயணத்தில் விரைவாக பலமடைய வேண்டும் என்பதே தமிழ் தேச மக்களின் அரசியல் விருப்பம்.

நாட்டின் நிறைவேற்று அதிகாரத்தையும் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பான்மை கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அடுத்து வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலிலும், மாகாண சபை தேர்தலிலும் முழு நாட்டையும் தமதாக்கிய பின்னர் யாப்பு சீர்திருத்தம் எனும் போர் வையில் தமிழர்களுக்கு எதிரான அரசியல் போரைத் தீவிரப்படுத்தும்.

சூடு கண்டவர்களாக நாம் நாடாளுமன்றத்திலும், நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் கட்சிகளாகவும் சமூக அமைப்புகளாகவும் தனித்தனியாகவும் கூட்டாகவும் எம் தாயக அரசியலை மையப்படுத்தி கூட்டு செயற்பாட்டு சூழலை அவசரமாக தமிழர் தாயக பிரதேசங்களில் உயிர்ப்பித்தல் அவசியம்.

உயிர்ப்பிக்கப்படும் கூட்டு தமிழ் மக்கள் பேரவை முன் வைத்த அரசியல் முன்மொழிவுகளோடு ஆரம்பிக்கலாம். பல்வேறு விதமான கருத்து மோதல்கள், தலைமைத்துவம் தொடர்பான சிக்கல்கள்,அமைப்பு ரீதியில் நிர்வாக சிக்கல்களும் வரலாம்.

கொள்கை அரசியலில் விட்டுக் கொடுப்புகள் இன்றி பலமான தேச அரசியலை கருத்தினை முதன்மைபடுத்தி சகிப்புத்தன்மையுடன் பயணத்தைத் தொடருவது சாலச் சிறந்தது.

மக்கள் விடுதலை முன்னணி செயலாளர் ரில்வின் சில்வா அவர்கள் அண்மைய ஊடக பேட்டியில் மக்கள் விடுதலை முன்னணியும் தேசிய மக்கள் சக்தியும் ஒன்று என்று கூறியதில் இருந்து மக்கள் முன்னணியில் அரசியல் முகம் வெளிப்பட்டுள்ளது. இதுவரை காலமும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முடியாதவர்கள் தேசிய மக்கள் சக்தி என முகம் கொண்டு வெளியில் வந்துள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளருடைய கூற்றுக்கு தேசிய மக்கள் சக்தி இதுவரைக்கும் எந்த பதிலையும் அளிக்கவில்லை. எனவே தேசிய மக்கள் சக்தி என்பது மக்கள் விடுதலை முன்னணியே. எனவே தமிழர்களின் அரசியல் தீர்வு விடயத்தில் அதன் கோரமுகம் அவ்வாறே உள்ளது என்பதிலே மாற்று கருத்துக் கிடையாது.

தமிழர் தேசத்தில் அரசு படைகளை பலப்படுத்தியதும், படைத்தளங்களை விரிவுபடுத்தியதும், அரச காணி மற்றும் பொதுமக்கள் காணிகளையும் கையகப்படுத்தியதும், மகாவலி அதிகாரி சபையை முன்னோக்கி நகர்த்துவதும் சிங்கள - பௌத்த திணைக்களங்களை சுதந்திரமாக செயல்பட இடமளித்ததும் தெற்கின் சிங்கள பௌத்த பேரின வாத அரசியலின் தேவை கருதியே.

தற்போதும் அதே அரசியல் கருத்தியல் கொண்டவர்கள் பாதைகள் திறந்து விடுகின்றனர், படைத்தளங்களை கூட்டுகின்றனர்(படைகளை குறைக்கவில்லை), மாவீரர் தினத்தை நினைவு கூர அனுமதிக்கின்றனர், கைதும் செய்கின்றனர். இது போன்ற கவர்ச்சி செயல்கள் மேலும் தொடரலாம். இதுவும் அவர்களின் அரசியல் தேவை கருதியே அன்றி தமிழர்களின் தேவை கருதி அல்ல.

இதனை தமிழ் தேச மக்களும் நன்கு உணர்வார்கள். இந்நிலையில் மாற்றம் ஏற்படலாம். எதிர்த்தரப்பு கோஷங்களுக்கு மத்தியில் மேலும் இறுக்கமடையலாம். ஆட்சி அதிகாரமும் பெரும்பான்மையையும் அவர்களிடத்தில் இருக்கின்றது என்பதை நாம் மறக்கவில்லை.

தமிழர் எதிர்கால அரசியல் நலன் கருதி கடந்த கால அரசியல் குரோதங்கள், போட்டியை அரசியல், காட்டிக் கொடுப்புக்கள், சலுகை அரசியல் என்பவருக்கு இடம் கொடுக்காது பெரும் தேசிய வாதத்தினை தேசமாக மக்களோடு சேர்ந்து எதிர் கொள்ளவும் பேச்சு வார்த்தை தொய்வும் தோல்வியையும் சந்திக்காது முன்னோக்கி நகர்ந்து செல்லும் பொறுப்பும் கடப்பாடும் தமிழ் தேச உணர்வாளர்களுக்கு அவசியம்.

மாவீரர்கள் சிந்திய குருதி எம்மண்ணிலிருந்து இன்னும் காயவில்லை. அவர்களின் எழுச்சிக் குரலும், தாகமும் இன்னும் அடங்கவில்லை. முள்ளிவாய்க்கால் அவலக் குரலும் தினம் தினம் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. நாம் ஏற்றிய தீபங்கள் எம் மனசாட்சியின் தீபங்களாக இருக்கட்டும். அது கூட்டு அரசியலில் சுடராக வியாபிக்கட்டும். - என அந்த அறிக்கையில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.





# 10 நாள்களாகியும் காரைதீவில் தண்ணீர் இல்லை! மக்கள் கொதிப்பு; ஆர்ப்பாட்டத்திற்கும் முஸ்தீபு!!

(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளத்தில் பிரதான பாரிய நீர்க்குழாய் உடைத்தெறியப்பட்ட காரணத்தால் கடந்த பத்து நாள்களாக காரைதீவுக் கிராமத்திற்கு குழாய் நீர் விநியோகம் முற்றாக தடைப்பட்டுள்ளது.

தற்காலிகமாக, மாவடிப்பள்ளி இணைப்பிலிருந்து குடிதண்ணீர் விநியோகத்தை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

காரைதீவு பிரதேச காரியாலய பொறுப்பதிகாரி விஜயரெத்தினம் விஜயசாந்தன் இது குறித்துக் கூறுகையில் –

மாவடிப்பள்ளியில் இருந்து இன்று பெறப்படுகின்ற குடி தண்ணீரை காரைதீவில் வலயம் வலயமாக மாற்றி மாற்றி விநியோகிக்க இருக்கின்றோம். பிரதான குழாய்த்திருத்தம் எப்போது முடியும் என்று தற்போது கூற முடியாதுள்ளது. – என்றார்.

அதனிடையில் பிரதேச சபை முதல் தன்னார்வ அமைப்புகள், சமூக செயற்பாட்டாளர் என்று பல தரப்பினர் பவுஸர் மூலம் வீதி வீதியாக குடிதண்ணீ வழங்கிவருகின்றனர்.

எனினும் பிரதான நீர் விநியோகம் சீர்செய்வது தொடர்பில் இதுவரை நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பையைத் தவிர வேறு யாரும் கவனம் எடுக்கவில்லை என்று பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இத்தடை தொடர்பாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் உதவிப் பொது முகாமையாளர், உயர் அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

நிந்தவூர், சாய்ந்தமருதைப் பொறுத்தவரை அருகில் இருந்து குடிதண்ணீர் பெறப்படுவதால் பாரிய தட்டுப்பாடு இல்லை என்று கூறப்படுகிறது. ஆனால் காரைதீவுக்கு ஒரு வழியிலும் நீர் விநியோகம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் காரைதீவு பொது மக்கள் கொதிப்படைந்துள்ளனர். குடிதண்ணீர் இன்று வரும், நாளை வரும் என்று எதிர்பார்த்த மக்களுக்கு கடந்த பத்து நாள்களாக கிடைத்தது ஏமாற்றமே.

பொதுமக்கள் கருத்து தெரிவிக்கையில் –

விடயங்கள் பெயரளவில் இருப்பதாகவும் குழாய் நீர் திருத்தச் செயற்பாடுகள் மந்தகதியில் நடைபெறுவதாகவும் அறியமுடிகிறது.

சபையின் பொறுப்பாளிகள் மக்களுக்கு இதுவரை உத்தியோகபூர்வமாக எதனையும் சொல்லவில்லை.

களியோடை அருகே சேதமடைந்த பாலம் நிரந்தரமாக திருத்தப்படுவது வரவேற்புகுரியது.

ஆனால் அத்தியாவசிய தேவையான தண்ணீர் தொடர்பாக இவ்வாறு பாராமுகமாக இருப்பது கவலை அளிக்கின்றது. பாரபட்சம் காட்டப் படுகிறது என்று கருதுகிறோம்.

விடயம் அறிந்த சமூக சேவையாளர்கள் உண்மை நிலையை அறிந்து செயற்பாட்டை துரிதப்படுத்த அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்தோ அல்லது திறம்பட நடந்தால் அவர்களுக்கு ஊக்கமளிப்பதன் மூலமோ இன்னும் துரிதப்படுத்தலாம்.

உண்மையில் மந்த கதியில் நடந்தாலோ அல்லது ஏதாவது இழுபறிகள் தடைகள் இருந்தாலோ ஜனாதிபதியின் 24 மணிநேர மக்கள் குறை சேவைக்கு அறிவித்து விடயத்தை ஓர் பொது ஆர்ப்பாட்டம் மூலம் கவன ஈர்ப்பு செய்வது அவசியமாகிறது.

இச் செயற்பாட்டிற்கு பொது கட்டமைப்புகள் மக்கள் சேவையாளர்கள் மனிதாபிமான செயற்பாட்டாளர்கள் இருந்தால் முன்வர வேண்டும். – என்கின்றனர்.














# பல்லாயிரம் மாணவர்களுக்கு அன்னமிட்டு அறிவூட்டும் 'ஐயமிட்டுண்' 100 ஆவது வாரம்!

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

சமூக மாற்றத்துக்கான ஊக்கியாக செயற்படும் 'ஐயமிட்டுண்' நிறுவனம், வடக்கு, கிழக்கு, மலையகம் எங்கும் பல்லாயிரம் பள்ளி மாணவர்களுக்கு அன்னமிட்டு அறிவூட்டி நவம்பர் மாதத்தில் 100 ஆவது நிறைவு வாரத்தை நிறைவு செய்துள்ளது.

கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலயத்தில் கடந்த நவம்பர் ஐந்தாம் திகதி 'ஐயமிட்டுண்' அமைப்பின் 100 ஆவது நிறைவு வாரத்தினை முன்னிட்டான நிகழ்வு இடம்பெற்றது.

பாடசாலையின் முதல்வர் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் முரளிதரன் மற்றும் ஐயமிட்டுண் அமைப்பின் நிறுவுனர் முரளிதரன் மற்றும் கலாநிதி சுகன்யா முரளிதரன் மற்றும் கிளிநொச்சி கரைச்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர் தர்மரட்ணம் ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் கிருஸ்ணமூர்த்தி மற்றும் பாடசாலையின் நலன்விரும்பிகள் பெற்றோர் என பலரும் கலந்து கொண்டனர்.

ஐயமிட்டுண் நிறுவனம் பல சாதனைகள் படைத்து மூன்றாவது ஆண்டில் கால்தடம் பதித்துள்ளது. இந்த நிகழ்வின் போது கிளிநொச்சி விவேகானந்தா வித்தியாலய வளாகத்தில் மரநடுகையும் இடம்பெற்றிருந்தது.

இல்லை என்று வந்த ஏழைகளுக்கு தானம் இட்டு தானும் உண்ண வேண்டும் என்பதே ஐயமிட்டுண் என்பதன் கருப்பொருளாகும். இல்லாதவர்க்கு தானம் இடுவது தருமங்களுள் சிறந்த தானமாகும்.

"வறியார்க் கொன்றீவ தேயீகை" என்று இதனைப் பாராட்டி சான்றோர் கூறி இருக்கின்றார்கள். தரும சிந்தனையை சமூகத்தில் வளர்ப்பதற்கு இந்தச் செய்கை அவசியம் வேண்டும்.

இலங்கை பிரதமருடன் சந்திப்பு

ஐயமிட்டுண் திட்டத்தின் நிறுவனரும் மூலகர்த்தாவான முரளிதரன் கல்வி அமைச்சரான பிரதமரையும், பிரதிக் கல்வி அமைச்சரையும், ஆஸ்த்திரேலியத் தூதுவரையும் சந்தித்து இந்தத் திட்டத்தின் விளைவுகளைப் பற்றி அண்மையில் விவரித்திருந்தார்.

ஐயமிட்டுண் கடந்த பல வருடங்களாக தாயகத்தில் பின்தங்கிய பாடசாலைகளில் சமூகப்பங்களிப்புடன் நடைபெறும் ஒரு மாணவ சமூக வலுவூட்டல் திட்டமாகும். இதன் நோக்கம் சமூகத்தின் பங்குபற்றுதலுடன் மாணவர்களின் பசி மற்றும் போசாக்கின்மையை நீக்குவதனூடாகப் பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவினை அதிகரித்து அவர்களின் கல்வி மட்டங்களை அதிகரிக்கச் செய்வதாகும்.

இந்தத் திட்டத்தில் பாடசாலை அட்சய பாத்திரம், சமூகச் சமையல், பாடசாலைத் தோட்டம் ஆகிய செயற்பாடுகள் உள்ளன. அட்சய பாத்திரத்தில் பாடசாலைச் சமூகம் தங்கள் பிள்ளைகளின் உணவுக்காக தாங்கள் விரும்பும் பங்களிக்கக் கூடிய உணவுப் பொருள்களை பங்களித்து உணவூட்டலாம்.

சமூகச்சமையலில் சமூகம் தங்கள் பிள்ளைகளுக்கான உணவைத் தயாரிப்பதுடன், பாடசாலைக் தோட்டத்தில் பாடசாலை தமக்கும் சமூகத்துக்கும் தேவையானதை விளைவித்துக் கொள்ளவும் ஊக்குவிக்கின்றனர்.

இதுவரை இந்தத் திட்டத்தில் 40,000 மாணவர்கள் உணவூட்டி ஊட்டமளிக்கப்படுகிறார்கள். இதனில் சமூகத்தின் பங்களிப்பு உச்சமாக இருக்கிறது. அதேவேளை மாணவர்களின் கல்விச் செயற்பாடும் அதிகரித்துள்ளது.

ஔவையாரின் ஆத்திச்சூடி வரிகளுக்கு ஏற்ப இலங்கையில் உள்ள ஆதரவற்ற குழந்தைகளின் வாழ்க்கையை மாற்றுவதை நோக்கமாக ஐயமிட்டுண் அமைப்பு கொண்டுள்ளது. 2022 ஜுலை ஆரம்பமாகி, அன்னமிட்டு அறிவூட்டிய ஐயமிட்டுண் அமைப்பின் சாதனைகள் பல.

**மூன்றாவது ஆண்டினில் ஐயமிட்டுண்**

மூன்றாவது ஆண்டினில் தடம் பதிக்கும் ஐயமிட்டுண் அமைப்பு, "உண்பதற்கு முன் ஏழைகளுக்கு உணவைப்பகிர்ந்துகொள்ளுங்கள்" என்று போதிக்கும் ஆழமான கொள்கையின் அடித்தளத்தைப் பின்பற்றுகிறது.

வடக்கு, கிழக்கு மலையகம் என எவ்வித பேதமின்றி பின்தங்கிய எல்லைக் கிராமங்களில் அனைவருக்கும் தமிழ் மாணவர்களுக்கு கல்வி கிடைப்பதற்கு,

புலம்பெயர்ந்த உறவுகள் பங்களிப்புடன் பல நலத்திட்டங்களை ஐயமிட்டுண் அமைப்பினர் செய்து வருகின்றனர்.

கல்வி என்பது வாழ்வில் எவ்வளவு முக்கியம் என்பதால், குடும்பத்தில் ஒருவருக்காவது கல்வியை போதித்தால் அதன்மூலம் சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும். தாயகத்தில் மாணவர்கள் கல்வியை பெற பல தடைகள் காரணமாக உள்ளது. அவற்றை நிவர்த்தி செய்வதே ஐயமிட்டுன் அமைப்பின் பிரதான நோக்கமாகும்.

பாடசாலை மாணவர்களுக்கு ஒரு வேளை உணவளிக்கும் வகையில் ஐயமிட்டுண் திட்டம் வடக்கு , கிழக்கு, மலையகம் என பல பின் தங்கிய பாடசாலைகளில் நடைமுறையில் உள்ளது.

இதன்மூலம் தங்களால் இயன்ற பொருள்களை பாடசாலை மாணவர்கள் கொண்டு வந்து பெற்றார் இணைந்து உணவை தயாரித்து பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்து உண்கின்றனர்.

தொடர்ச்சி▼

# பல்லாயிரம் மாணவர்களுக்கு.....

தொடர்ச்சி▼

**மாற்றத்துக்கான ஊக்கியாக ஐயமிட்டுண்**


தாயகத்தில் பின்தங்கிய குழந்தைகள் எதிர்கொள்ளும் பட்டினி மற்றும் கல்வி சமத்துவமின்மையின் தடைகளை அகற்றுவதே ஐயமிட்டுண் அமைப்பின் நோக்கமாகும்.

சத்தான உணவு மற்றும் தரமான கல்வி வளங்களுக்கான நிலையான அணுகலை வழங்குவதன் மூலம், அடுத்த தலைமுறையினருக்கு பிரகாசமான, ஆரோக்கியமான எதிர்காலத்துக்குத் தேவையான கருவிகளை மேம்படுத்துவதை ஐயமிட்டுண் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது.



சமூக ஈடுபாடு மற்றும் நிலையான நடைமுறைகள் மூலம், ஒவ்வொரு குழந்தையும் அவர்களின் சமூகப் பொருளாதார நிலையைப் பொருட்படுத்தாமல் கற்கவும், வளரவும், செழிக்கவும் வாய்ப்புள்ள சூழலை வளர்க்க ஐயமிட்டுண் அமைப்பு செயற்படுகிறது.




Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555





# கோமாரி மற்றும் செல்வபுரத்தில் நடுநிசியில் யானைகள் அட்டகாசம்!

## மயிரிழையில் உயிர் தப்பிய அறுவர்!!

(வி.ரி.சகாதேவராஜா)

பொத்துவில் பிரதேசத்தில் உள்ள கோமாரி மற்றும் செல்வபுரம் பகுதிகளில் நேற்று (03) நள்ளிரவில் யானைகள் பலத்த அட்டகாசத்தை புரிந்துள்ளன.

கோமாரிப் பகுதியில் சண்முகம் திலகராசா (வயது - 48) என்பவரின் வீட்டை உடைத்து அங்கிருந்த நெல்லை உண்டுள்ளன.

அது மாத்திரம் அல்ல அங்கு சமையலறையில் இருந்த அங்கர் பால்மா மற்றும் பல உணவு பண்டங்களையும் விட்டுவைக்கவில்லை மொத்தத்தில் அந்த வீடு உடைத்து சேதமாக்கப்பட்டிருக்கின்றது.

அப்போது உள்ளிருந்த மூன்று பெண் பிள்ளைகளும் தாயும் தந்தையும் வீட்டின் பின்பக்கம் உள்ள யன்னல் வழியாக பாய்ந்து மயிரிழையில் தப்பி ஓடியுள்ளனர்.


மற்றும் ஒரு சம்பவம் செல்வபுரத்தில் அதே நேரத்தில் இடம்பெற்றது .

அங்கே சுமார் மூன்று வீடுகளை மதில்களை உடைத்து சேதமாக்கி இருக்கின்றன யனைகள்.



பொத்துவில் கோமாரி பிரதேசத்திலே கடந்த இரு மாதங்களாக யானையின் தாக்குதல் கூடுதலாக இருக்கின்றது. இருவர் கொல்லப்பட்டும் உள்ளனர்.

ஆனால் இதுவரை தாக்குதலை தடுக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.


## ஹலிமாஸ் பாத்
( ஹலிமாவின் வழி )

(2012, பொஸ்னியா, 100 நிமிடங்கள்)

நெறியாளர்: அர்சன் அன்ரன் ஒஸ்ரோஜிக்

08. 12. 2024, ஞாயிறு

4.00 மணி

தந்தை செல்வா கலையரங்கு,
யாழ்ப்பாணம்.



## அனுமதி இலவசம் !!!

இன. மத முரண்பாடுகளால் மனிதம் நசுங்குறுவதைச் சித்திரிக்கும் – உண்மை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட பொஸ்னியத் திரைப்படம்;திரைப்பட விழாக்கள் பலவற்றில் விருதுகளையும் பெற்றது!



யாழ்ப்பாணத் திரைப்படக் கழகம்

# ஹிருணிகா விடுதலை; விடுவித்தது நீதிமன்று!



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர நீதிமன்றத்தை அவமதித்ததாகக் குற்றம் சுமத்தி அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையை நிறைவு செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம், அந்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து அவரை விடுவிக்க இன்று (04) உத்தரவிட்டது.

கல்கிசை நீதிவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவு தொடர்பில் ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிட்ட அறிக்கையை மீளப்பெறுவதாகவும், எதிர்காலத்தில் அவ்வாறான கருத்துக்களை வெளியிடப் போவதில்லை எயனவும் ஹிருணிக்கா தனது சட்டத்தரணி ஊடாக அறிவித்ததை அடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நீதியரசர்கள் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் சஷி மகேந்திரன் ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# பூஸா சிறைச்சாலை வளாகத்தில் தொலைபேசி உள்ளீட்டு உபகரணம்

**பொலிஸ் விசேட அதிரடிப்படையால் மீட்பு**

பூஸா சிறை வைத்தியசாலை வளாகத்திலும் சிறைச்சாலை வளாகத்திலும் ஏராளமான தொலைபேசி உள்ளீட்டு உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை பூஸா உயர்பாதுகாப்பு சிறைச்சாலை முகாமின் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் சிறைச்சாலை வைத்தியசாலை மைதானத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இந்த உபகரணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐந்து கையடக்கத் தொலைபேசி சார்ஜர்களும் 08 டேட்டா கேபிள்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளுக்காக சிறைச்சாலை அதிகாரிகளிடம் அவை ஒப்படைக்கப்பட்டுள்ளன என்று க பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.

# சட்டவிரோத களியாட்ட விடுதி கொள்ளுப்பிட்டியில் முற்றுகை

கொள்ளுப்பிட்டியில் சட்டவிரோதமான முறையில் மதுபான விற்பனை நிலையங்கள் நடத்தப்பட்ட பிரபல களியாட்ட விடுதி ஒன்று கலால் திணைக்கள அதிகாரிகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

கலால் ஆணையாளர் நாயகத்துக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்த சுற்றிவளைப்பில் சுங்கவரியில் லாத 25 லட்சம் ரூபா பெறுமதியான 100 வெளிநாட்டு மதுப் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன.

கலால் ஆணையாளர் நாயகத்தின் பணிப்புரையின் பேரில், தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பு நகர கலால் அலுவலக அதிகாரிகள் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.



# 8 கிலோ கேரள கஞ்சாவுடன் திருமலையில் ஒருவர் கைது!

திருகோணமலை, அன்புவழிபுரம் பிரதேசத்தில் 8 கிலோ கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று திருகோணமலை பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கேரள கஞ்சா கடத்தப்படுகிறது என்று கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, நேற்று (03) இரவு சோதனை செய்தபோது, அவரிடமிருந்து 8 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் மேலதிக விசாரணைக்காக திருகோணமலை, உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# அரிசியை இறக்குமதி செய்யாவிட்டால் இரண்டு வாரங்களில் கடும் தட்டுப்பாடு!

**ஏற்படும் என்கிறது அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் சங்கம்**

இரண்டு வாரங்களுக்குள் அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால், அரிசிக்குக் கடும் தட்டுப்பாடு ஏற்படும் என்று அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நீண்டகால வேலைத் திட்டத்தை தயாரிப்பது அரசின் பொறுப்பாகும் என்று அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் சங்க தலைவர் ஏ. கே. சேமசிங்க குறிப்பிட்டார்.

நாம் நீண்ட கால தீர்விற்கு செல்ல வேண்டும், இல்லை என்றால், மீண்டும் மீண்டும் இந்த நெருக்கடிக்கு செல்லலாம்.

சிறு போகத்தில் நெல் கொள்முதல் செய்ய, நெல் சந்தைப்படுத்தல் சபை இந்த நெருக்கடியை தீர்க்க முறையான திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

மேலும், அரசு குறுகிய காலத் தீர்வாக வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்யாது விட்டால் சந்தையில் அரிசிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று மேலும் தெரிவித்துள்ளார்.



# தேங்காய் விலை நெருக்கடிக்குத் தீர்வு; சதொச ஊடாக 10 லட்சம் தேங்காய்கள்!

நாட்டில் நிலவும் தேங்காய் விலை நெருக்கடிக்கு தீர்வாக அடுத்த 2 வாரங்களுக்குள் 10 லட்சம் தேங்காய்களை புறநகர் பகுதிகளுக்கு விநியோகிக்க அரசு தீர்மானித்துள்ளது.

இதன்படி சதொச ஊடாக தேங்காய் ஒன்று 130 ரூபாவுக்கு வழங்கப்படவுள்ளது என்று இன்று (04) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார்.

அத்துடன், அரசுக்குச் சொந்தமான தோட்டங்களில் கிடைக்கும் தேங்காய் உற்பத்திகள் இவ்வாறு குறைந்த விலைக்கு விற்பனை செய்யப்படவுள்ளது என்றும் வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

# எட்டு உயிர்களைக் காவு வாங்கிய பாதை; கண்டு கொள்ளவில்லை அதிகாரிகள்!

## நாடாளுமன்றத்தில் அஷ்ரப் தாஹிர் எம்.பி தெரிவிப்பு

வெள்ள அனர்த்தம் ஏற்படுவதற்கு சில நாள்களுக்கு முன்பு நாட்டில் இவ்வாறானதொரு இடர் ஏற்படபோகிறது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்திருந்தபோதும் அந்தப் பிரதேசத்தில் உள்ள அரச அதிகாரிகள் பிரதேசத்தை பாதுகாக்க எடுத்த நடவடிக்கைகள் என்ன என்பதை இந்த இடத்தில் நான் வினயமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் மாவடிப்பள்ளி பாலம், கிட்டங்கி பாலம் ஆகிய பாலங்கள் சரியாக நிர்மாணிக்கப் படாமையின் காரணமாக வெள்ள நிலைமைகளின் போது அந்தப் பகுதியில் உயிர் ஆபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எட்டு உயிர்களைக் காவு வாங்கிய பாதையை அரச அதிகாரிகள் இன்னும் கண்டுக்கொள்ளவில்லை.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் இவ்வாறு தெரிவித்தார்.



நேற்று (03) நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிக்கையில்,

இந்த முறை ஏற்பட்ட உயிர் சேதம் போன்று இன்னுமொரு முறை இடம் பெறாமல் எதிர்காலத்தில் முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த அரசால் கொண்டுவரப்பட்ட அஸ்வெசும திட்டத்தால் வறுமைக் கோட்டில் வாழ்கின்ற மக்கள் இன்னும் பாதிப்புக்குள்ளான நிலமையினையே அவதானிக்க முடிகிறது.

அந்தத் திட்டமானது அப்போதைய அரசைத்தக்க வைப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட மக்களுக்கு பொறுத்தமற்ற ஒன்றாகும்.

இது விடயம் குறித்து இப்போதைய அரசு மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் அரசியல் அதிகாரம் மூலம் நியமிக்கப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் குறித்த நடவடிக்கைகளை இந்த அரசு இதுவரை முன்னெடுக்கவில்லை. இதுவிடயம் குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.- என்றார்.

# ‘அரங்க வலைகள்’ நூல் வெளியீடு!

‘கலைமுகம்’ இதழில் நீ.மரிய சேவியர் அடிகளார், மேற்புலத்தில் நிலவிய நவவேட்கைவாத மற்றும் மாற்றரங்குகள் பற்றி ‘அரங்க வலைகள்’ என்னும் பெயரில் தொடராக எழுதிய கட்டுரைகள் நூலாகத் தொகுக்கப்பட்டு குமரன் புத்தக இல்ல வெளியீடாக வெளிவருகின்றது.

இந்த நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 7ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இல.286, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது. யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் பேராசிரியர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் கலந்துகொள்ளவுள்ளார்.

நிகழ்வில் வெளியீட்டுரையை கி.செல்மர் எமில் ஆற்றுவார்.மதீப்பீட்டுரைகளை பா.அகிலன், சி.ரமேஷ், நா.நவராஜ் ஆகியோர் வழங்குவர்.

இந்தக் கட்டுரைகள் கலைமுகத்தில் தொடராக வெளிவந்த காலத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### ஹஜ் யாத்திரிகர்கள் பயணித்த விபத்து

# நோட்டன் பிரிட்ஜ் பகுதியில் உள்ள நினைவுத் தூபியில் இன்று அஞ்சலி!

## இன்றுடன் 50 வருடங்கள் பூர்த்தி!!

இலங்கை வரலாற்றில் மிக மோசமான விமான விபத்து இடம்பெற்ற 50 வருட பூர்த்தியை முன்னிட்டு நோட்டன் பிரிட்ஜ் விமலசுரேந்திர நீர்த்தேக்கத்துக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில், விபத்தில் உயிரிழுந்தவர்களை நினைவு கூர்ந்து நினைவிடம் முன் மலர் தூவி, மெழுகுவர்த்தி ஏற்றி ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் மற்றும் ஓட்டோ சங்க உறுப்பினர்கள் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

1974 ஆம் ஆண்டு டிசெம்பர் 4 ஆம் திகதி மார்ட்டின் ஏர் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான டிசி 08 விமானம் இந்தோனேசியாவின் சுரவேயார் விமான நிலையத்தில் இருந்து மக்காவை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த நிலையில், நோட்டன் பிரிட்ஜ் ஏழு கன்னியர் மலை உச்சியில் மோதியதில் அதில் பயணித்த 182 பேர் மற்றும் 09



ஊழியர்கள் உயிரிழுந்திருந்தனர்.

அந்த விமானத்தின் ஒரு டயர் நோட்டன் பிரிட்ஜ் விமல சுரேந்திர நீர் தேக்கத்திற்கு அருகில் நினைவுச் சின்னமாக வைக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் பகுதியில் ஊழியர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.





# கனேடிய தமிழர் பேரவையினரால் இலங்கைக்கு வெள்ள நிவாரணம்

கனடிய தமிழர் பேரவையின் மனித நேய செயற்றிட்டங்களின் இணைப்பாளர் துஷ்யந்தன், ஆர்.துரைரட்ணம் ஆகியோர் மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் திருமதி ஜே.ஜே. முரளீதரனைச் சந்தித்து மட்டக்களப்பு மாவட்டத்தின் அனர்த்த நிலமைகளையும் நிவாரணத் தேவைகளையும் கேட்டறிந்தனர்.

இதன்பின்னர் மாவட்டச் செயலாளரின் ஆலோசனையின் பேரில், மேலதிக மாவட்டச் செயலர் திருமதி முகுந்தன் மற்றும் பிற அதிகாரிகளின் ஒருங்கிணைப்புடன், பாதுகாப்பு மையங்களில் வசிக்கும் 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கென 498 பால் பைக் கெட்டுகள் ஒதுக்கப்பட்டன.

தற்போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் 37 பாதுகாப்பு நிலையங்கள் நிறுவப்பட்டு, வெள்ளத்தால் இடம்பெயர்ந்த 4,879 நபர்களை உள்ளடக்கிய 1,753 குடும்பங்களுக்கு தங்குமிடம் வழங்கப்பட்டுள்ளது.

நிவாரண முயற்சிகளின் முதல் கட்டமாக, சிறு குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கு பால் பவுடர் விநியோகிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எஞ்சிய பிரிவுகளுக்குள் அமைந்துள்ள பாதுகாப்பு நிலையங்களில் குழந்தைகளைக் கொண்ட குடும்பங்களுக்கும் ஆதரவு கோரப்பட்டுள்ளது.

அடுத்த சில நாட்களுக்குள் இந்த கூடுதல் ஆதரவை வழங்குவதை உறுதிசெய்துள்ளனர்.




# தமிழ் பண்பாட்டு வலயத்தின் வரலாற்று நிகழ்வு பிரான்ஸில்!

## நடராஜா மதீந்திரனின் நினைவாக அஞ்சல் முத்திரை வெளியீடு

பிரான்ஸ், தமிழ் பண்பாட்டு வலயம் மற்றும் பிரான்சின் அஞ்சல் சேவையான La Poste உடன் இணைந்து, 2012 ஆம் ஆண்டு நவம்பர் 8 ஆம் நாள், பாரிஸில் படுகொலை செய்யப்பட்ட பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் பொறுப்பாளர், கேணல் பரிதி என்று அழைக்கப்பட்ட நடராஜா மதீந்திரன் நினைவாக ஒரு அஞ்சல் முத்திரையை வெளியிட்டு வைத்துள்ளது.

இந்த நிகழ்வு, கடந்த ஞாயிற்றுக்கிழமை பொபிக்னி நகரசபை மண்டபத்தில், பொபிக்னி நகரபிதாவும் மாவட்டசபை உறுப்பினருமான அப்தில் சாடியால் உத்தியோகபூர்வமாக வெளியீடு செய்யப்பட்டது. நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக பொண்டி நகரசபை உறுப்பினரும் மாவட்டசபை உறுப்பினர், மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நடராஜா மதீந்திரனின் படுகொலைக்கு நீதி பெற்றுத்தர தாங்கள் துணை நிற்பதாகவும், இந்த நினைவுச் சின்னம் தமிழரின் தியாகத்துக்கான முக்கியமான அடையாளமாக இருக்கும் என்றும் அவர்கள் இதன்போது கூறினர்.

நடராஜா மதீந்திரனின் தாயார் தருமதி நடராஜா கமலாம்பிகை மற்றும் பொபிக்னி நகரபிதா இணைந்து முத்திரையை வெளியிட்டனர். முதல் முத்திரையை பிரான்ஸ் தமிழர் வர்த்தக சங்கத்தின் தலைவர் இரா. சிறிதரன் பெற்றுக்கொண்டார்.





# வெள்ளத்தில் மூழ்கும் மருதமுனை பகுதிகளுக்கு வடிகான் திட்டம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

மழை காரணமாக வெள்ளத்தில் மூழ்கும் மருதமுனை 65 மீற்றர் சுனாமி மீள்குடியேற்றக் கிராம மக்களின் பாதுகாப்பு கருதி கல்முனை மாநகர சபையால் துரித கதியில் வடிகான்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேச மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கி வரும் வெள்ள அனர்த்த பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருட்டு இங்கு 05 முக்கிய இடங்களில் வடிகான்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் திட்டத்தின் ஊடாக இந்தப் பிரதேசத்தில் உள்ள அனைத்து வடிகான்களும் இணைக்கப்பட்டு வடிகான் கட்டமைப்பு முழுமைப்படுத்தப்படவுள்ளது.

இந்த வடிகான் நிர்மாணப் பணிகளை கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ் நேற்று செவ்வாய்க் கிழமை (03) கண்காணிப்பு செய்தார். இதன்போது இந்த வேலைத் திட்டத்தை துரிதமாக நிறைவு செய்யுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நிகழ்வில் கல்முனை மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ். எம். அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே. ஏ.எச். ஜௌசி, கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், வேலைகள் அத்தியட்சகர் பி.ரி.எம். நஹீம், தொழில் நுட்ப உத்தியோகத்தர் எம். சுகுமார் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

மழை காலங்களில் வெள்ளத்தில் மூழ்கித் தத்தளிக்கும் மருதமுனை 65 மீற்றர் கிராமத்தின் நீண்ட காலப் பிரச்சினைக்கு கல்முனை மாநகர சபை மிகவும் கரிசனையுடன் தீர்வு பெற்றுத் தந்துள்ளது.





# மாற்றுத் திறனாளிகள் நிகழ்வு மட்டக்களப்பில்

(பழுவூரான்)

“உள்ளடக்கிய நிலையான எதிர்காலத்திற்காக மாற்றுத் திறனாளிகளின் தலைமைத்துவத்தை விரிவுபடுத்தல்” என்னும் தொனிப்பொருளில் இம்முறை சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களமும் மட்டக்களப்பு மாவட்ட செயலகமும் மட்டக்களப்பு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சம்மேளமும் இணைந்து நடத்திய நிகழ்வு மட்டக்களப்பில் நேற்று செவ்வாய்க்கிழமை (03) நடைபெற்றது.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இருந்து “உனது நலனுக்காக தீர்மானம் எடுப்பதில் உனக்காக நான் துணை நிற்பேன்” என்னும் தொனிப்பொருளில் மாற்றுத் திறனாளிகளின் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு நகர மண்டபம் வரையில் இந்த ஊர்வலம் வருகை தந்தது. அங்கு அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்ட மாற்றுத் திறனாளிகள் சம்மேளனத்தின் தலைவர் எஸ்.அருள்ராஜா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் கலந்து கொண்டார்.

சிறப்பு அதிதியாக மட்டக்களப்பு மாநகர சபையின் ஆணையாளர் பொறியியலாளர் என்.சிவலிங்கமும், விசேட அதிதியாக கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் கே.இளங்குமுதன், கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்கள சிரேஷ்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் எஸ்.அருள்மொழி, மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் திருமதி சி.கோணேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாற்றுத் திறனாளிகளின் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.



# வெள்ள அனர்த்தம் காரணமாக தென்மராட்சியில் அழியும் நெல்!

(த.சுபேசன்)

வெள்ள அனர்த்தம் காரணமாக தென்மராட்சியின் பல பாகங்களிலும் நெற் பயிற்செய்கை அழிவடையும் அபாயத்தில் உள்ளது.

அண்மையில் பெய்த கன மழை காரணமாக தென்மராட்சியின் பெரும்பாலான கிராமங்கள் வெள்ள அனர்த்தத்தை சந்தித்துள்ளன.

இந்த நிலையில் வயல் நிலங்களில் தேங்கி நிற்கும் மேலதிக நீர் கடலைச் சென்றடைய வழியின்றி தொடர்ந்தும் தேங்கி நிற்பதால் நெற் பயிர்கள் நாளடைவில் அழிவைச் சந்திக்கும் அபாயநிலை காணப்படுகின்றது.

கச்சாய், அல்லாரை, மட்டுவில், தனங்களப்பு, அறுகுவெளி, மறவன் புலோ, கைதடி, சரசாலை, எழுது மட்டுவாழ் பகுதிகளைச் சேர்ந்த வயல் நிலங்கள் இவ்வாறு பாதிப்பை எதிர் நோக்கியுள்ளன.

தென்மராட்சியின் பல கிராமங்களிலும் வயல் நிலங்களில் காணப்படும் மேலதிக நீர் வழிந்தோடுவதற்கான வாய்க்கால் வசதிகள் சீரின்மையால் வருடா வருடம் நெற்பயிர்கள் அழிவைச் சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.





# சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில் நாவற்குழி வாய்க்கால் சீரமைப்பு

(த.சுபேசன்)

நாவற்குழி இளந்தளிர் சிறுவர் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நாவற்குழி முன்னூறு வீட்டுத் திட்டப் பகுதியில் உள்ள வாய்க்கால்கள் சீர் செய்யப்பட்டன.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் காரணமாக தென்மராட்சி– நாவற்குழிப் பிரதேசமும் கடும் வெள்ளப் பாதிப்புக்கு உள்ளாகியது. இந்த நிலையில் இளந்தளிர் சிறுவர் கழகத்தினர் கிராமத்தில் உள்ள விளையாட்டுக் கழகம் மற்றும் இளைஞர் குழுவினரை இணைத்து இந்த முன்மாதிரியான செயற்பாட்டை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சின்னத்திரை நடிகர் நேத்ரன் மரணம்



பிரபல சின்னத்திரை நடிகரான நேத்ரன் நேற்றிரவு காலமானார் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

25 ஆண்டுகளாக பல சின்னத்திரை தொடர்களில் நடித்து வந்த நேத்ரன், கடந்த 6 மாதங்களாக நுரையீரல் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.





# மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை கோரி ஜெய்சங்கருக்கு புதுச்சேரி முதல்வர் கடிதம்

யாழ்ப்பாணம் – சுண்டிக்குளம் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 18 இந்திய மீனவர்களையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி, புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 18 இந்திய மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் நேற்று கைது செய்யப்பட்டனர்.

அதன்போது, மீன்பிடி படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படை பேச்சாளர் கெப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

பின்னர் மேற்படி மீனவர்கள் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில், அவர்களை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், குறித்த மீனவர்களை விடுவிப்பதற்காக இலங்கை அரசுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி கோரியுள்ளார்.

அதேநேரம் இந்த விடயத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சு உடனடியாக தலையீடு செய்ய வேண்டும் என, இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் வி.வைத்தியலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய நாடாளுமன்றில் இதனைக் குறிப்பிட்ட அவர், இது தொடர்பான கோரிக்கை கடிதம் ஒன்றையும் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் சமர்ப்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கும் மோடிக்கும் இடையே முக்கிய பேச்சு



தமிழகத்தில் பெஞ்சல் புயல் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் பிரதமர் மோடி தொலைபேசி மூலம் கலந்துரையாடியுள்ளார்.

பெஞ்சல் புயல் காரணமாக தமிழகத்தின் கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக குடியிருப்புப்பகுதிகளை வெள்ள நீர் சூழ்ந்துள்ளமையால் அப்பகுதி மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.

இதற்கிடையே, பெஞ்சல் புயல் நிவாரண நிதியாக 2 ஆயிரம் கோடியை மத்திய அரசு வழங்க வேண்டுமென பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் கடிதம் எழுதி இருந்தார்.

இந்நிலையில், புயலால் ஏற்பட்ட மழை வெள்ள பாதிப்புகள் குறித்து, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் பிரதமர் மோடி தொலைபேசியில் உரையாடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தமிழகத்தில் தற்போதைய சூழல் எப்படி உள்ளது? மழை, வெள்ளத்தால் எவ்வளவு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்? விவசாய நிலங்கள் எந்த அளவு பாதிக்கப்பட்டுள்ளது? என்பனவற்றை முதலமைச்சரிடம் பிரதமர் கேட்டறிந்துகொண்டார் எனவும் பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், புயல் மற்றும் வெள்ள பாதிப்பில் இருந்து தமிழகத்தை மீட்பதற்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என முதலமைச்சரிடம் பிரதமர் உறுதியளித்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# ஆபிரிக்க நாடுகளில் பரவும் ப்ளீடிங் ஐ வைரஸ் மக்களை எச்சரிக்கும் உலக சுகாதார அமைப்பு

குரங்கு காய்ச்சலை தொடர்ந்து ஆபிரிக்க நாடுகளில் ப்ளீடிங் ஐ வைரஸ் (Bleeding eyes virus) பரவி வருகிறது.

குறிப்பாக கிழக்கு ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் பாதிப்பு மிக தீவிரமாக உள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் ருவாண்டாவில் மாத்திரம் சுமார் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

பிரேசில், கென்யா, ருவாண்டா, கொங்கோ, உகாண்டா, பொலிவியா உள்ளிட்ட 15 நாடுகளுக்கு செல்லும் தங்கள் நாட்டுப் பயணிகளுக்கு பிரித்தானிய அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ப்ளீடிங் ஐ வைரஸ் எனப்படும் இந்த மார்பர்க் வைரஸ் நோய் மனிதர்களுக்கு ஏற்படும் மிகவும் ஆபத்தான நோய் என்று உலக சுகாதார அமைப்பு கூறுகிறது.

இந்த வைரஸ் ஒருவருக்குப் பரவினால் இரண்டு முதல் 21 நாட்களில் அறிகுறிகள் தென்படத் தொடங்கும்.

அதிக காய்ச்சல், கடுமையான தலைவலி, உடல்வலி ஆகியவை இதன் முக்கிய அறிகுறிகளாகும்.

வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, தசைப்பிடிப்பு, குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை 3 ஆவது நாளில் இருந்து ஆரம்பிக்கும் எனக் கூறப்படுகிறது.

# கடற்கரையில் யோகா பயிற்சியில் ஈடுபட்ட ரஷ்ய நடிகை அலையில் சிக்கி உயிரிழப்பு

கடற்கரையில் யோகா பயிற்சி ஈடுபட்ட ரஷ்ய நடிகை ஒருவர் ராட்சத அலையில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

ரஷ்யாவை சேர்ந்த நடிகை கமிலா பெலியாட்ஸ்காயா (வயது 24), விடுமுறையை கொண்டாட தனது ஆண் நண்பருடன் தாய்லாந்து சென்றுள்ளார்.



அங்கு புகழ்பெற்ற சுற்றுலாத்தலமான கோ ஸமுய் கடற்கரைக்குச் சென்ற அவர் அங்குள்ள பாறை பகுதியில் யோகா செய்துகொண்டிருந்தார். அதை காணொலியும் எடுத்தார்.

அப்போது, திடீரென வந்த ராட்சத அலை அவரை இழுத்துக்கொண்டு சென்றது. அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் அவரைக் காப்பாற்ற முயன்றனர். ஆனால் முடியவில்லை. பின்னர் அடித்துச் செல்லப்பட்ட இடத்திலிருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் அவரது உடல் மீட்கப்பட்டது. இதுகுறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இது தொடர்பான காணொலி காட்சி சமூக வலைதளத்தில் பரவி வருகிறது.





# வுஹான் ஆய்வகத்திலிருந்து கொவிட் கசிவு; அமெரிக்காவின் விசாரணையில் தகவல்

கொவிட் தொற்றுநோய் உலகைப் பேரழிவிற்கு உட்படுத்திய பல ஆண்டுகளுக்குப் பின்னர், வைரஸ் சீனவின் வுஹான் ஆய்வகத்திலிருந்து கசிந்திருக்கலாம் என்று அமெரிக்க விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடியரசுக் கட்சியின் தலைமையிலான ஹவுஸ் செலக்ட் துணைக்குழுவானது 1.1 மில்லியன் அமெரிக்கர்களைக் கொன்ற தொற்று நோய் குறித்த இரண்டு ஆண்டு கால விசாரணையை நிறைவு செய்த பின்னர் மேற்கண்ட அறிவிப்பினை திங்களன்று வெளியிட்டது.

ஏ,எப்.பி. செய்தி நிறுவனத்தின்படி, குழுவானது 25 கூட்டங்கள், 30 இற்கும் மேற்பட்ட நேர்காணல்கள் மற்றும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான ஆவணங்களை மதிப்பாய்வு செய்த பின்னர் அதன் முடிவை எட்டியது.

520 பக்க அறிக்கையானது மத்திய, மாநில அளவிலான பதில்கள், வைரஸின் தோற்றம், தடுப்பூசி முயற்சிகள் ஆகியவற்றை மதிப்பாய்வு செய்தது.

இந்த ஆய்வானது அமெரிக்காவுக்கும், உலகிற்கும் அடுத்த தொற்று நோயைக் கணிக்கவும் அவற்றிலிருந்து தயாராகவும், அடுத்த தொற்றுநோயிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், அடுத்த தொற்றுநோயைத் தடுக்கவும் உதவும் என்று குழுவின் குடியரசுக் கட்சியின் தலைவர் பிராட் வென்ஸ்ட்ரப் காங்கிரசுக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டினார்.

கனடா முரசு
பக்கங்கள் 03
புதன்கிழமை 04/12/2024

## இலக்கு வைக்கப்படும் தெற்காசிய வர்த்தகர்கள்

கனடாவில் தெற்காசிய வர்த்தகர்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்கள் அச்சுறுத்தப்படுகின்றனர் எனவும்

02




# ரொறன்ரோ அறக்கட்டளை மீது நடத்தப்பட்ட சைபர் தாக்குதல் 10 மில்லியன் டொலர் களவு

**ரொறன்ரோவின் முன்னணி அறக்கட்டளை நிறுவனம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட சைபர் தாக்குதல் காரணமாக 10 மில்லியன் டொலர்கள் களவாடப்பட்டுள்ளன.**

**இந்த அறக்கட்டளையானது இசை கலைஞர்கள் மற்றும் இசைத்துறை சார்ந்த ஏனையவர்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றது.**

இலாப நோக்கமற்ற வகையில் இந்த அறக்கட்டளை செயல்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், மேற்படி நிறுவனத்தின் வங்கிக் கணக்கினை ஊடறுத்து, சைபர் தாக்குதல் நடத்தப்பட்டு பணம் களவாடப்பட்டுள்ளது.

இவ்வாறு களவாடப்பட்ட பத்து மில்லியன் டொலர் பணம் கிரிப்டோ நாணயங்களாக மாற்றப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

தி பவுன்டேசன் எஸிஸ்டிங் கனடிய டெலன்ட் ஒன் ரெக்கார்டிங்ஸ் (The Foundation Assisting Canadian Talent on Recordings) என்ற அமைப்பினால் இந்த அமைப்பின் மீது இந்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்த தாக்குதல் தொடர்பில் கனடாவின் ஸ்கொட்டி வாங்கி பொறுப்பு சொல்ல வேண்டும் என நிறுவனம் தெரிவித்துள்ளது.

இணையவழி கடவு சொல் போன்றவற்றை இந்த நிறுவனம் உரிய முறையில் பயன்படுத்தவில்லை எனவும் இதனால் இந்த திருட்டுச் சம்பவத்திற்கு பொறுப்பு சொல்ல முடியாது என்றும் வங்கி தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பிலான வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

# கனடிய எல்லை பாதுகாப்பு படையினருக்கு கூடு கூடுதல் அதிகாரம் வழங்க நடவடிக்கை



கனடாவின் எல்லை பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளின் அதிகாரத்தை அதிகரிப்பது குறித்து பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டொமினிக் லிபிலான்க் மற்றும் அவரது அதிகாரிகள் கவனம் செலுத்தி வருகின்றனர்.

புதிய கருவிகள் அதிகாரிகளுக்கு வழங்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எல்லைப் பாதுகாப்பு விவகாரம் காரணமாக அமெரிக்கா கூடுதல் விரகளை விதிக்கத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ராம்ப் இது தொடர்பிலான எச்சரிக்கையை வெளியிட்டிருந்தார்.

இதனைத் தொடர்ந்து எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கூடுதல் அதிகாரத்தை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.



# கடும் பனிப்பொழிவு காரணமாக நியூ பிரவுன்ஸ்விக்கில் மின் தடை

கனடாவின் நியூ பிரவுன்ஸ்விக் பிராந்தியத்தில் பனிப் பொழிவு காரணமாக மின்சார தடை ஏற்பட்டுள்ளது.

சுமார் 3500 பேர் மின்சாரம் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடுமையான பனிப்பொழிவு மற்றும் மரங்கள் முறிந்து விழுந்த காரணத்தினால் இவ்வாறு மின்சார தடை ஏற்பட்டுள்ளது.

மின்சாரம் தடைபட்டவர்களது மின் இணைப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை சீரற்ற கால நிலை காரணமாக சுமார் 40000 பேர் மின்சார வசதியின்றி பாதிக்கப்பட்டிருந்தனர்.

நாளை வரையில் சீரற்ற காலநிலை தொடரும் என கனடிய சுற்றாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.







## இலக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)


அச்சுறுத்தல் விடுக்கும் வகையிலான தொலைபேசி அழைப்புகள் விடக்கப்படுகின்றன எனறும் தெரிவிக் கப்படுகின்றது.

அனேக சந்தர்ப்பங்களில் தெற்காசிய பூர்வீகத்தை கொண்ட வர்த்தகர்குள் மிரட்டப்பட்டு கப்பம் கோரல்கள் இடம்பெறுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

பணம் வழங்குமா வழங்குமாறு கூறிய பல்வேறு அச் சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

சுமார் பல நூறு ஆயிரம் டொலர்கள் இவ்வாறு கப்பம் கோரப்படுகின்றன என தெற்காசிய வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக ட்ரக் வண்டி போக்குரத்தில் ஈடுபடும் நிறுவன உரிமையாளர்கள் மீது இவ்வாறு அச்சுறுத்தல்கள் விடுக்கப்




படுகின்றன.

இவ்வாறான அச்சுறுத்தல்கள் தங்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளதாக தெற்காசிய வார்த்தர்கள் தெரிவிக்கின்றனர்.



# கனடாவில் காணாமல் போன இளைஞன் சடலமாக மீட்பு

கனடாவில் காணாமல் போன இளைஞன் ஒருவர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தின் சர்ரே பகுதியில் இந்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. 18 வயதான ஜோசப் மாகு என்ற இளைஞரே இவ் வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த ஒரு மாத காலத்திற்கு முன்னர் இந்த இளைஞர் காணாமல் போயிருந்தார்.

இந்த இளைஞரை தேடும் பணிகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. இவர் ஜோசப் மாகு பிரிட்டிஷ் கொலம்பிய பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த மாணவர் கடந்த ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி காணாமல் போயிருந்தார்.

மேற்படி இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக அவரது குடும் பத்தினர் சமூக ஊடக வலைத்தளத்தில் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ள னர்.

இந்த இளைஞர் எவ்வாறு உயி ரிழந்தார்? மரணத்திற்கான காரணம் என்ன என்பதை குறித்து தகவல் கள் இதுவரையில் வெளியிடப்பட வில்லை.



# கனடாவில் அரசியல் தலையீடு; இந்தியா மீது மீண்டும் குற்றச்சாட்டு

கனடாவில் அரசியல் தலையீடு களில் ஈடுபட்டதாக இந்தியா மீது மீண்டும் குற்றச்சாட்டு சுமத்தப்பட் டுள்ளது.

கனடிய கான்சர்வேட்டிவ் கட்சியின் தலைமைத்துவ போட்டியின் போது இவ்வாறு அரசியல் தலையீடு மேற் கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்திய முகவர்கள் இந்த விவ காரத்தில் தலையீடு செய்தனர் என தகவல்கள் வெளியாகி உள்ளன.

கடந்த 2022 ஆம் ஆண்டு கான்சர் வேட்டிவ் கட்சியின் தலைமை பதவிக் காக பற்றிக் பிரவுன் போட்டியிட்ட போது, இவ்வாறு அவரது தலை மையை மலினப்படுத்தும் முயற்சி களில் இந்தியா ஈடுபட்டது என தெரி விக்கப்படுகிறது. பிரவுன் சீக்கிய சமூகத்துடன் நெருங்கிய தொடர்பு பேணி வரும் நிலையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.